# கால்களைப் பாதிக்கும் நீரிழிவு நோய்

வில்சன் சைலஸ்

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் காலிலும் கணுக்காலிலும் ஏற்படும் வெவ்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் கைத்தேர்ந்து விளங்கும் டாக்டர் கண்ணன் கலியப்பெருமாள், கடந்த பத்து ஆண்டுகளாக டான் டோக் செங் மருத்துவமனையில் தமது பணியைச் செவ்வனே செய்து வருகிறார்.

சிங்கப்பூரில் எலும்பு மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்றுள்ள ஆறு வல்லுநர்களுள் ஒருவராக விளங்கும் இவர், உன்னதமான தமது மருத்துவப் பணியின் மூலம் நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வைப் பிறருக்கு உண்டாக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

இந்திய சமுதாயத்தில் உள்ள அநேகர், சத்துள்ள உணவை உண்பதற்கும் உடற்பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் முக்கியத்துவம் தராமல் இருக்கின்றனர்.

இதன் விளைவாக அவர்கள் எளிதில் நீரிழிவு நோய்க்கு ஆளாவதுடன் தங்கள் கால்களையும் இழந்துவிடுகின்றனர் என்று டாக்டர் கண்ணன் தமிழ் முரசிடம் கருத்துரைத்தார்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கால்கள் வழக்கமாக உணர்விழந்து போவதால் அவர்கள் எங்காவது தங்கள் கால்களை இடித்துக் கொள்ளும்போது வெட்டு காயங்கள் ஏற்படுகின்றன.

நீரிழிவு நோய் காரணமாக அந்தப் காயங்கள் விரைவில் ஆறாமல் சீழ் வைத்து புண்களாக மாறுகின்றன. நாளடைவில் அது மோசமாகி முழுக் காலையும் பாதித்துவிடுவதால், அறுவை சிகிச்சையின் வழி புண் உள்ள காலை நீக்கவேண்டிய சூழல் நிலவுகிறது.

சிங்கப்பூர் மக்கள் தொகையில் பதினொரு விழுக்காட்டினர் நீரிழிவு நோயால் அவதியுறுவதாகவும், தம்மைக் காண வரும் நோயாளிகளில் ஐம்பது விழுக்காட்டினர் காலில் ஏற்படும் புண் காரணமாக அறுவைச் சிகிச்சையின் மூலம் தங்கள் கால்களையோ கால் விரல்களையோ இழந்துவிடுவதாகவும் டாக்டர் கண்ணன் தெரிவித்தார்.

நீரிழிவு நோயாளிகள், குளித்தப் பின்னர் விரல்களுக்கிடையே உள்ள நீரை நன்றாகத் துடைப்பதால் சேற்று புண் உண்டாவதைத் தடுக்கலாம். அதே சமயம் ஈரத்தன்மை அதிகமாகக் குறைவதால் விரல்களுக்கிடையே வெடிப்புகள் ஏற்பட்டு புண்களாக மாறவும் வாய்ப்புண்டு. ஆதலால் நோயாளிகள் தங்கள் கால்களைக் கவனிப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.



நீரிழிவால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவரின் கால்களைப் பற்றி ஆலோசனை வழங்குகிறார் டாக்டர் கண்ணன். படம்: டான் டோக் செங் மருத்துவமனை

“நோய் வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சிய மனோர்பாவம் நம்மவர்களிடையே நிலவி வரும் ஒரு தவறான அணுகுமுறை. கால் உணர்வின்றி இருக்கும்போதே அதைப் பரிசோதித்து பார்த்துவிடுதல் நல்லது.

**டாக்டர் கண்ணன் கலியப்பெருமாள்**

“நோய் வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சிய மனோபாவம் நம்மவர்களிடையே நிலவி வரும் ஒரு தவறான அணுகுமுறை. கால் உணர்வின்றி இருக்கும்போதே அதைப் பரிசோதித்து பார்த்துவிடுதல் நல்லது. புண்கள் மோசமாவதற்கு முன் அதைக் குணப்படுத்தி விட்டால் கால்களை இழக்காமல் தடுக்கலாம்,” என்றார் டாக்டர் கண்ணன்.

புண்கள் ஏற்படுவதுடன் பாதத்தின் தசைகள் பாதிக்கப்படுவதால் சிலருடைய கால்கள் மிகவும் மோசமாக வளைந்து காணப்படுகின்றன. இன்றுள்ள நவீன மருத்துவக் கருவிகளைப் பயன்படுத்தி அதையும் சரி செய்ய பல வசதி வாய்ப்புகள் உருவாகியிருப்பதாகவும் அவற்றைப் பயன்படுத்தி பலரும் தங்கள் கால்களின் பழைய நிலையை அடைந்துள்ளதாகவும் டாக்டர் கண்ணன் மேலும் கூறினார்.

‘வரும் முன் காப்பதே சிறந்த மருந்து’ என்று குறிப்பிட்ட அவர், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடனே மருத்துவரை அணுகி தங்களைப் பரிசோதித்துக் கொள்வது சாலச்சிறந்தது என்று ஆலோசனை வழங்கினார்.

wsilas@sph.com.sg